வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 14.01.2026 புதன்கிழமை இதழ் : 14 பக்கங்கள் : 08

# தரம் 6 இன் கல்வி மறுசீரமைப்பு அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைப்பு!

## சர்ச்சைகளை அடுத்து அமைச்சரவை தீர்மானம்

கொழும்பு, ஜனவரி 14

**"6ஆம் தரத்துக்கான கல்வி மறுசீரமைப்பை ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. உரிய மீளாய்வின் பின்னர் 2027ஆம் ஆண்டு முதல் மறுசீரமைப்பு நடவடிக்கை இடம்பெறும்." -இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள கல்வி மறுசீரமைப்பு விவகாரம் தொடர்பில் அமைச்சர் கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தரம் ஒன்று மற்றும் ஆறுக்கு உரிய கல்வி மறுசீரமைப்பு ஆரம்பமாகி இருந்தாலும் தரம் 6 ஆங்கில பாடத் திட்டம் தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளது.

இந்தநிலையில் சிலர் இதனை அரசியலுக்காக பயன்படுத்தி வருகின்றனர். மேலும் சிலர் தவறான கருத்துகளை விதைக்கின்றனர். இதனால் கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் நம்பிக்கையீனம் ஏற்படும். நம்பிக்கையுடன்தான் இப்பணியை முன்னெடுக்க வேண்டும்.

அதனால்தான் கால அவகாசம் வழங்கும் நோக்கில் தரம் ஆறுக்கு உரிய கல்வி மறுசீரமைப்பு 2027 வரை ஒத்திவைக்கப்படுகின்றது. எனினும், தரம் 1இற்குரிய கல்வி மறுசீரமைப்பு திட்டமிட்ட அடிப்படையில் நடைபெறும் - என்றும் தெரிவித்துள்ளார். (அ)

# கல்வி சீர்திருத்தங்களை அரசியல் மயமாக்காதீர்!

## கல்வி அதிகாரிகள் கோரிக்கை

கொழும்பு, ஜன. 14

கல்விச் சீர்திருத்தங்களை வெறும் அரசியல் பிரச்னையாக மாற்றாமல், தேசத்தின் எதிர்காலம் கருதிய தேசியப் பொறுப்பாகக் கருதி முன்னெடுத்துச் செல்லவேண்டும் என இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கம்

07

# போராட்டத்தை கைவிட்டார் விமல்

கொழும்பு, ஜன. 14

தன்னால் முன்னெடுக்கப்பட்ட சத்யாகிரகப் போராட்டம் வெற்றிபெற்றதாகக் கூறி, போராட்டத்தை நேற்று நிறைவுக்கு கொண்டுவந்தார் விமல் வீரவன்ஸ.

கல்வி மறுசீரமைப்பு கைவிடப்படவேண்டும், கல்வி அமைச்சு பதவியை பிரதமர் துறக்க வேண்டும் என வலியுறுத்தியே கல்வி அமைச்சுக்கு முன்பாக விமல் நேற்று முன்தினம் போராட்டத்தில் குதித்தார்.

தரம் 6இற்குரிய கல்வி மறுசீரமைப்பு 2027 வரை ஒத்திவைக்கப்படும் என அரசாங்கம் நேற்று அறிவித்த நிலையிலேயே, போராட்டத்தை விமல் முடிவுக்கு கொண்டுவந்துள்ளார். (அ)

# கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து ஜனாதிபதி செயலகத்தில் கூட்டம்

## ஆசிரியர் தொழிற்சங்கங்கள் பங்கேற்பு

கொழும்பு, ஜன. 14

அரசாங்கத்தின் புதிய கல்வி சீர்திருத்தங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோர் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

இதன்போது கல்வி சீர்திருத்தங்களின் அவசியத்தை ஏற்றுக்கொண்ட தொழிற்சங்கங்கள், 6ஆம் தர பாடத் திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியதுடன், அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட விருப்பம்

07

# பாதுகாப்பு ஆய்வு ஜாம்பவான் இக்பால் அத்தாஸ் காலமானார்



கொழும்பு, ஜன. 14

இலங்கையின் மூத்த பத்திரிகையாளரும் பாதுகாப்பு விவகார ஆய்வுத்துறையின் ஜாம்பவானுமான இக்பால் அத்தாஸ் நேற்று அதிகாலை காலமானார்.

இறக்கும்போது அவருக்கு வயது 81 ஆகும்.

தெஹிவளையில் உள்ள கிராண்ட் மசூதி மயானத்தில் நேற்று பிற்பகல் அவரது இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

07

# ஹரிணிக்கு எதிரான பிரேரணை; சபையில் இரண்டு நாள் விவாதம்

கொழும்பு, ஜன. 14

கல்வி அமைச்சர் பிரதமர் ஹரணி அமரசூரியவுக்கு எதிராக எதிர்த்தரப்பினரால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிரான விவாத்தை எதிர்வரும் 22 மற்றும் 23ஆம் திகதிகளில் நடத்துவதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்த்தரப்பினாரால் கோரிக்கை விடுக்கப்படும் பட்சத்தில் விவாதம் நடத்தப்படும் கால அவகாசம் மேலும் நீடிக்கமுடியும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

# தேசிய வீடமைப்புத் திட்டத்தின் ஆரம்ப வைபவம் நாளை யாழில்

## ஜனாதிபதி அநுர குமார பங்கேற்கிறார்

யாழ்ப்பாணம், ஜன. 14

இலங்கையின் 2026ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மற்றும் நாடு முழுவதுமுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக 31,318 புதிய வீடுகளை நிர்மாணிக்கும் தேசிய வேலைத்திட்டம் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர் டி.பி. சரத் இந்தத் திட்டத்தின் விவரங்களை வெளியிட்டார்.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மீசாலை கிராம உத்தியோகத்தர் பிரிவில்

07

# மகிந்தவை சந்தித்தார் ஜூலி சங்

கொழும்பு, ஜன. 14

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று காலை இடம்பெற்றது.

07

# டித்வா புயலால் பாதிக்கப்பட்டோருக்காக இலங்கைக்கு மேலும் 20 இலட்சம் டொலர் உதவிகளை வழங்குகின்றது அமெரிக்கா

கொழும்பு, ஜன. 14

டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உதவி செய்வதற்கான மனிதாபிமான உதவியாக இன்னும் 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று அறிவித்தது.

இதன் மூலம் டித்வா சூறாவளி நிவாரணத்துக்காக அமெரிக்கா வழங்கிய மொத்த உதவிகளின் பெறுமதி 4 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

2025 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில்

07

# முல்லைத்தீவு வைத்தியசாலையில் நான்கு மாடி நவீன மருத்துவ விடுதி

கொழும்பு, ஜன. 14

முல்லைத்தீவு மாவட்ட மக்களின் சுகாதாரத் தேவைகளை மேம்படுத்தும் நோக்கில், முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் புதிய நான்கு மாடி மருத்துவ விடுதி தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் 600 மில்லியன் ரூபாய் நிதியுதவியுடன் இந்தத் திட்டம்

07

# அடுத்த வாரம் இலங்கைக்கு வரும் நாணய நிதிய பிரதிநிதிகள் குழு

கொழும்பு, ஜன. 14

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று எதிர்வரும் 22 ஆம் திகதி நாட்டுக்கு வருகை தரவுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் ஐந்தாவது மீளாய்வினை பற்றி விவாதிப்பதே இந்த விஜயத்தின்

07

# அரசாங்க சேவைக்கு புதிதாக 26,095 பேர்

கொழும்பு, ஜன. 14

அரசாங்க சேவைக்கு புதிதாக 26 ஆயிரத்து 95 பேரை இணைத்துக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கமைய, 23ஆயிரத்து 344 ஆசிரியர்களும் இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துக்கு இவ்வாண்டு முதல் கட்டமாக ஐநூறு வீடுகள்!

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணத்தில் இந்த ஆண்டு 500 வீடுகளை நிர்மாணிப்பதற்கு வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக யாழ். மாவட்ட செயலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள வீட்டுத்திட்டம் தொடர்பாக பிரதேச செயலாளர்களுடனான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலின் போதே அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

வீடமைப்பு நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சினால் முதற்கட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 500 வீடுகள் நிர்மாணிப்பதற்கான ஒதுக்கீடுகள் கிடைத்துள்ளது- என்றார்.

வீட்டுத்திட்ட பயனாளிகள் பட்டியல்களை சுற்றறிக்கைக்கு அமைய தெரிவு செய்யுங்கள் எனவும், வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு கொடுப்பனவுகள் கிடைக்கப் பெறாத நபர்கள் மற்றும் கொடுப்பனவு தேவைப்படுபவர்கள் தொடர்பிலான விவரங்களை கையளியுங்கள் என பிரதேச செயலர்களிடம் அவர் கோரினார்.

இக் கலந்துரையாடலில் மேலதிக செயலர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள், பிரதி உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக விடய தானத்துக்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (அ)

## பரந்தன் இரசாயன தொழிற்சாலையை மீள இயக்குவது குறித்து உரையாடல்

கிளிநொச்சி, ஜன. 14

கிளிநொச்சி பரந்தன் இரசாயன தொழிற்சாலையை மீள இயக்குவதற்கான அடிக்கல் நாட்டு விழா, எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், தொழிற்சாலை தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதில், பரந்தன் இரசாயன தொழிற்சாலை தலைவர் சதானந்தன் நேசராஜன், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் பங்கேற்றனர்.

இதன்போது, தொழிற்சாலையின் மீளுருவாக்கம் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது. (அ)

## திருமறை கலாமன்றத்தின் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 14

திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா இம்முறையும் இரு நாட்கள் நடைபெறவுள்ளது.

பொங்கல் தினமான நாளை வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறை கலாமன்றத்தின் பணியகத்தில் பொங்கல் வைபவத்துடனும் அதனைத் தொடர்ந்து காலை 7.00 மணிக்கு இல.17, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைஞானசுரபி தியான இல்லத்தில் பண்பாட்டு வழிபாட்டுடனும் நடைபெறும்.

பொங்கல் விழாவையொட்டிய கலை நிகழ்ச்சிகள் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஈழத்துத் தமிழ்க் கலைஞர் ஒன்றியத்தின் தலைவரும் யாழ். போதனா வைத்தியசாலையின் பொது மருத்துவ நிபுணருமான மருத்துவர் சிவபாலன் சிவன்சுதன் கலந்துகொள்வார்.

இதில், நடனம், கவிதை அளிக்கை, மரபுவழி நாடகப் பாடல்கள், வேட ஜாலம்- நவீன நாடகம் போன்றவை நடைபெறும். (ஐ)

## ஹெரோயின் போதைப்பொருளுடன் யாழ்ப்பாணத்தில் இருவர் சிக்கினர்!

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ். நகரை அண்மித்த பகுதிகளில் வைத்து இருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடம் இருந்தும் 03 கிராம் 130 மில்லி கிராம் மற்றும் 06 கிராம் 510 மில்லி கிராம் போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்ட இருவரையும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ)

## இலங்கையில் இணைய மோசடிகள் ஓராண்டில் இரு மடங்காக உயர்வு!

கொழும்பு, ஜன. 14

இலங்கையில் இணையவழி நிதி மோசடிகள் கடந்த ஒரு வருடத்தில் இரு மடங்காக அதிகரித்துள்ளதாக பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

குறிப்பாக சமூக வலைத்தளங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் இவ்வாறான மோசடிகளைக் கட்டுப்படுத்த பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வு திணைக்களம் தீவிர நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யூ. வூட்லர் வழங்கிய தரவுகளின்படி, 2024ஆம் ஆண்டு 1,528 புகார்கள் பதிவாகின, 442 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். கடந்த ஆண்டு முறைப்பாடுகளின் எண்ணிக்கை 3,100ஆக - இரு மடங்காக அதிகரித்துள்ளது. இதில் 314 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு மாத்திரம் இணைய மோசடிகளுடன் தொடர்புடைய 146 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக சீனா, இந்தியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் சுற்றுலா வீஸாவில் வந்து கொழும்பு, நீர்கொழும்பு, கம்பஹா ஆகிய பகுதிகளில் முகாமிட்டு இவ்வாறான “மோசடி முகாம்களை” நடத்தியது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த மோசடிகளின் சிக்கல் தன்மை மற்றும் மொழிப் பிரச்னைகளைக் கருத்தில் கொண்டு, கடந்த 2024 செப்ரெம்பரில் சீனாவின் சிறப்புக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவியை இலங்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நாடியுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் தலைமையகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள இணையக் குற்றங்கள் தடுப்புப் பிரிவின் மூலம் இவ்வாறான மோசடிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் எச்சரித்துள்ளனர். (அ)

## கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த 200 பேருக்கு பொங்கல் பானைகள்

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த 200 பேருக்கு பொங்கல் பானை வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று காலை நடைபெற்றது. யாழ் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி கலந்து கொண்டு குறித்த பொங்கல் பானையை வழங்கினார்.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ)




## அபாயகரமான மின்கம்பம் அகற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 14

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் எந்நேரமும் முறிந்து விழும் அபாய நிலையில் காணப்பட்ட மின் கம்பம் நேற்று அகற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போலின் தலையீட்டில் மின்சார சபையால் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பருத்தித்துறை துறைமுக பகுதிக்கு அதிகளவானோர் தினமும் மாலை வேளையில் வந்து செல்கின்ற பொழுதுபோக்கிடமாக காணப்படுவதுடன் கடற்கரை வீதியூடாக அதிகளவான மக்கள் பயணித்து வரும் நிலையில் எந்த நேரமும் முறிந்து விழும் அபாய நிலையில் மின் கம்பம் ஒன்று சிதைவுக்குள்ளாகி காணப்பட்டு வந்தது.

இது தொர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில் மின்சார சபைக்கு தெரியப்படுத்தி அதனை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை நகர பிதாவினால் தெரியப்படுத்தப்பட்டது.

இதையடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை இலங்கை மின்சார சபையின் ஊழியர்களினால் மேற்படி மின் கம்பம் பாதுகாப்பான முறையில் அகற்றப்பட்டது. (அ)

## டித்வா இடர் காரணமாக 174 பேர் இன்னும் மாயம்!

கொழும்பு, ஜன. 14

டித்வா சூறாவளியினால் காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் நாட்டின் பல வேறு பகுதிகளில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

174 பேர் இன்னும் காணாமல் போனவர்களாகப் பட்டியலிடப்பட்டுள்ளனர். நிலவும் கடும் மழையால் கேகாலை மற்றும் நுவரெலியா போன்ற மாவட்டங்களில் தேடுதல் நடவடிக்கைகள் தற்காலிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் மழை காரணமாகத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் தேசப்பிரிய பண்டார தெரிவித்துள்ளார். கடந்த வார இறுதியில் ஒருவரது உடலம் மீட்கப்பட்டுள்ளது.

மண்சரிவு காரணமாக சுமார் 40 அடி உயரத்திற்கு மணல் மேடுகள் உருவாகியுள்ளதால், இயந்திரங்களைப் பயன்படுத்தித் தேடுதல் நடத்துவதில் பெரும் சிரமம் நிலவுவதாக அவர் குறிப்பிட்டார்.

நுவரெலியா மாவட்டத்தில் ரம்பொடை போன்ற பகுதிகளில் தேடுதல் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள போதிலும் ஏனைய இடங்களில் தொடர்கின்றன. கடந்த வார இறுதியில் தலையற்ற நிலையில் உடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

சூறாவளி தாக்கி ஒரு மாதத்துக்கும் மேலாகியுள்ளதால், இனிவரும் காலங்களில் மீட்கப்படும் உடலங்களை அடையாளம் காண்பது கடினமாக இருக்கலாம் என அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தற்போதைய தரவுகளின்படி, டிட்வா அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 648 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 174 பேர் இன்னும் காணாமல் போனவர்களாகப் பட்டியலிடப்பட்டுள்ளனர். (அ)

## வட்டு. இந்துவுக்கு புதிய அதிபர்!

யாழ்ப்பாணம், ஜன. 14

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக சிவஞானபோதம் தனஞ்சயன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் குறித்த பாடசாலையில் கடந்த காலங்களில் ஆசிரியர், பிரதி அதிபர், அதிபர் ஆகிய பதவிகளை வகித்து, பின்னர் வெளி மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அதன் பின்னர் யாழ். இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராக கடமை புரிந்தார்.

இவ்வாறான பின்னணியில் மீண்டும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்ட நிலையில் நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றார். (அ- 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
14.01.2026 புதன்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# அரசியல் தற்துணிவின்றி மாற்றங்கள் இல்லை

ஆறாம் ஆண்டு கல்விச் சீர்திருத்தத்தை அரசாங்கம் பிற்போட்டுள்ளது. குறித்த சீர்திருத்தத்துக்கு எதிர்ப்புகள் வெளிப்பட்டநிலையில் அரசாங்கம் அதன் முடிவை மாற்றியிருக்கிறது. முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவினதும் இன்னும் பலரதும் எதிர்பபுக்கு அரசாங்கம் இறங்கிப் போயிருக்கிறது. இந்த விடயத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய அவதூறான வகையில் விமர்சிக்கப்பட்டிருந்தார். எதிரணியினர் மகாநாயக்க தேரர்களிடமும் முறையிட்டிருந்தனர்.

ஆரம்பத்தில் எவ்வாறான தடைகள் வந்தாலும் கல்விச் சீர்திருத்தத்திலிருந்து அரசாங்கம் பின்வாங்காது என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்திருந்தார். ஆனால், அவர் கூறியதுபோன்று விடயங்களை முன்னெடுக்க முடியவில்லை. மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்று எண்ணுபவர்கள் - நம்புபவர்கள் இந்த இடத்தில்தான் சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஜனாதிபதி அநுர விரும்பினால் மட்டும் இந்த நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தி விடமுடியாது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்பது அடிப்படையில் அநுர குமார திஸநாயக்க என்னும் ஒரு நபரின் கவர்ச்சியால் ஊதிப் பெருப்பிக்கப்பட்ட ஒன்று. அநுர அலையென்பது அதுதான். சினிமா நடிகர்களைப் பார்த்து ரசிகர்கள் ஈர்க்கப்படுவது போன்று மக்கள் ஈர்க்கப்பட்டனர். இந்த அலையில் தமிழ் மக்களும் அள்ளுண்டு போயினர். ஆனால், பிரச்னை அரசாங்கத்தால் மாற்றங்களைத் தற்துணிவுடன் முன்னெடுக்க முடியவில்லை. ஓர் அரசியல்வாதி கொழும்பில் உணவு தவிர்ப்பை மேற்கொண்டவுடனேயே அரசாங்கம் பரபரப்படைகிறது.

ஆனால், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தற்துணிவுடன் முடிவுகளை எடுப்பாரானால், இந்த விடயங்களை எதிர்கொள்ளுவது கடினமான ஒன்றல்ல. ஆனால், அவரை சில விடயங்கள் தடுக்கின்றன. தடுக்கும் அந்த விடயங்கள்தான் உண்மையில் தென்னிலங்கையின் அரசியலாகும். எனவே, இங்கு இனவாதமற்ற ஆட்சி என்பது ஒரு கவர்ச்சிகரமான சுலோகமாக இருக்கலாம் - ஆனால், அந்த சுலோகத்தின் ஊடான அரசியல் அடைவு என்ன என்பதுதான் கேள்வி.

எதிர்ப்புகள் வெளிப்பட்டமையைத் தொடர்ந்து கல்விச் சீர்திருத்தத்தில் பின்வாங்கும் அரசாங்கத்தால் எவ்வாறு புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டு வரமுடியும்? அதிலும் அந்த யாப்பின் ஊடாக தமிழ் மக்களுக்கான அதிகாரங்களை உறுதிப்படுத்த முடியும்? நாங்கள் தமிழ் மக்களை ஏமாற்ற மாட்டோம் என்று அண்மையிலும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார்.

இலங்கைத் தீவில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும் என்றால் தென்னிலங்கையின் அடிப்படைவாதத் தரப்புகள், பௌத்த மதபீடங்கள் ஆகியவற்றின் தலையீடுகளைக் கருத்தில் கொள்ளாமல் முடிவெடுக்கும் அரசியல் தற்துணிவு இருந்தால் மட்டும்தான் அது சாத்தியப்படும். அவ்வாறில்லை என்றால் மாற்றம் என்பது வெறும் தேர்தல்கால சுலோகம் மட்டும்தான்.

உண்மையில், கவர்ச்சியால் வந்த பெரும்பான்மை என்றாலும் கூட, மாற்றங்களை ஏற்படுத்தும் துணிவிருந்தால் தேசிய மக்கள் சக்தி இலங்கையின் அரசியல் கட்டமைப்பை மாற்றியமைக்க முடியும். அதற்கான அரிய ஜனநாயக பலம் அரிதாகக் கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பு இனி கிடைக்கப் போவதில்லை. ஏனெனில், அநுர அலை என்பது பாராளுமன்றத் தேர்தலில் கை கொடுக்கப் போவதில்லை. தற்போதுள்ள 159 பாராளுமன்ற உறுப்பினர்களில் எத்தனை பேரால் மீண்டும் பாராளுமன்றம் செல்லமுடியும் என்பதுமே கேள்விக்குறி.

# சுகாதார ஊழியர்களுக்கு பாதுகாப்பான தொழில் சூழல் இருப்பது அவசியமாகும்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 14

வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்களுக்கு பாதுகாப்பான மற்றும் நிம்மதியான தொழில் சூழல் இருப்பது அவசியம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உப செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான சமில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

வைத்தியசாலைகளில் வைத்தியர்கள், ஏனைய சுகாதார ஊழியர்களுக்கு பாதுகாப்பான மற்றும் நிம்மதியான தொழில் சூழல் இருப்பது அவசியமாகும். இதற்கான பாதுகாப்பு, அடிப்படை வசதிகள் மற்றும் மருந்துகளை உறுதிப்படுத்துவது சுகாதார அமைச்சினதும் அதிகாரிகளினதும் பொறுப்பாகும். பல்வேறு தரப்பினரின் தலையீடுகள் காரணமாக இந்த தொழில் சூழல் பாதிக்கப்படும்போது, அது நோயாளர் பராமரிப்பு சேவைகளைப் பாதிக்கிறது. அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரின் செயல்பாடுகள் காரணமாக நோயாளர் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வைத்தியர்களுக்கு அச்சுறுத்தலான சூழல் நிலவுகிறது. குறித்த அதிகாரிக்கு எதிராக ஊழல், மோசடி மற்றும் முறையற்ற நடத்தைகள் தொடர்பில் பல குற்றச்சாட்டுகள் உள்ளன. அரசியல் குழுக்கள் வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்து வைத்தியர்களுக்கு இடையூறு விளைவிப்பதோடு, வைத்தியர்களை இலக்கு வைத்து துன்புறுத்தல்கள் இடம்பெறுகின்றன. அண்மையில், வைத்தியசாலை ஊழியர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்ட போதிலும், அதற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குறித்த வைத்திய அத்தியட்சகருக்கு எதிராக வெளிப்படையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும், விசாரணைக் காலம் முடியும் வரை அவரை பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கவேண்டும். இப்பிரச்னைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காத காரணத்தினால், கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளையும் உள்ளடக்கியதாக தொடர் வேலைநிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# டித்வா சூறாவளியை தொடர்ந்து 4 ஆயிரத்து 800 மண்சரிவுகள்

கொழும்பு, ஜன. 14

டித்வா சூறாவளிக்குப் பின்னர், நாட்டில் சுமார் 4 ஆயிரத்து 800 மண்சரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று ஆதர் சி கிளார்க் நிலையம் தெரிவித்துள்ளது.

செயற்கைக்கோள் தரவுகள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக, குறித்த நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் குமாரி மிகஹகொடுவ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனை குறிப்பிட்டுள்ளார்.

டித்வா சூறாவளிக்குப் பின்னர் பெறப்பட்ட செயற்கைக்கோள் நிழற்படங்கள் மற்றும் தரவுகளைப் பயன்படுத்தி, மண்சரிவு பின்னரான தரைத்தோற்ற வரைபடமாக்கல் மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

அந்த வரைபடங்களை பகுப்பாய்வு செய்தபோது, ஊடகங்கள் வாயிலாக இது வரை அறிவிக்கப்பட்டதை விடவும் மிக அதிக எண்ணிக்கையிலான மண்சரிவுகள் பதிவாகியுள்ளமை கண்டறியப்பட்டதாக குமாரி மிகஹகொடுவ கூறியுள்ளார்.

முன்னதாக, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் செயற்கைக்கோள் நிழற்படங்களின் அடிப்படையில் 1,241 இடங்களில் பாரிய மண்சரிவுகள் ஏற்பட்டதாக கூறியிருந்தது. இந்த நிலையில், மக்கள் வாழும் பகுதிகள் மற்றும் அணுகல் வசதிகளை கொண்ட இடங்களை மாத்திரம் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அடையாளம் கண்டிருக்கலாம். எனினும், தற்போது வெளியிடப்பட்டுள்ள செயற்கைக்கோள் நிழற்படங்களில், காடுகளுக்குள் இடம்பெற்ற மண்சரிவுகளின் எண்ணிக்கைகளும் கணக்கிடப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# வடக்கு, கிழக்கில் தொடர்ந்து மழை

கொழும்பு, ஜன. 14


வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் இடையிடையே மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களின் பல இடங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களின் பல இடங்களிலும் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். சில இடங்களில் 50 மி. மீற்றரிலும் கூடிய ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி, மாத்தறை, குருநாகல் மாவட்டங்களின் சில இடங்களிலும் அதிகாலை வேளையில் பனி மூட்டம் காணப்படும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொது மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். வியாபாரத்தில் வசூல் மந்தமாக இருக்கும். சக ஊழியர்களால் வேலைச்சுமை அதிகரிக்கும்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதம் வந்து போகும். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் ஆதரிப்பார்கள்.

**மிதுனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். புது வேலை அமையும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**கடகம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களை சுற்றி இருப்பவர்களின் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**சிம்மம்**
பால்ய நண்பர்கள் தேடி வருவார்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

**கன்னி**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள்.

**துலாம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். புது வாய்ப்புகள் அமையும். உற்சாகமான நாள்.

**விருச்சிகம்**
ராசிக்கு சந்திரன் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்து செயல்களுக்கான நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
எதையும் திட்டமிட்டு செய்யப்பாருங்கள். குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து போகும். பழைய கடன் பிரச்னை அவ்வப்போது மனசை வாட்டும். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் கூடும்.

**மகரம்**
குடும்பத்தில் மனம் விட்டு பேசுவீர்கள். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தை பெருக்குவீர்கள். சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கும்பம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன் பிறந்தோரும் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். திறன் பெருகும்.

**மீனம்**
உணர்ச்சிப் பூர்வமாகப் பேசி விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும்.

# எல்லை தாண்டி மீன்பிடித்த 10 இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜன. 14

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்க வந்த 10 இந்திய மீனவர்களை நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் நேற்று அதிகாலை கைது செய்தனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட இவர்கள், படகுடன் காரைநகர் கடற்படை முகாமுக்கு கொண்டு வரப்பட்டனர்.

கைதான மீனவர்கள் மற்றும் படகு என்பன நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (எ-03)

# வடமராட்சியில் அதிகளவில் பிடிபடும் இறால்

யாழ்ப்பாணம், ஜன. 14

வடமராட்சி கிழக்கு கடலில் தற்போது அதிகளவான இறால்கள் பிடிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு, பிடிக்கப்படும் இறால்கள் தரம் பிரிக்கப்பட்டு அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்று மீனவர்கள் கூறினர். (எ-08)

# பொலித்தீன் பாவனை முற்றாக தடை! மீறினால் கடும் சட்ட நடவடிக்கை

**ஊர்காவற்றுறை பிரதேச சபை அறிவிப்பு**

யாழ்ப்பாணம், ஜன. 14

ஊர்காவற்றுறை பிரதேச சபை ஆளுகைக்குள் பொலித்தீன், லஞ்சீற் பாவனை அவதானிக்கப்படும் பட்சத்தில் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தவிசாளர் அ. அன்னராசா எச்சரித்துள்ளார்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் இணைந்து நேற்று முன்தினம் ஊடக சந்திப்பு ஒன்றை பிரதேச சபையில் நடத்தினர். இதன்போது, தவிசாளர் மேலும் தெரிவிக்கையில்,

பொலித்தீன் பாவனை காரணமாக பல்வேறுபட்ட நோய்கள் ஏற்பட்டு தினமும் ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்கின்றனர். பொலித்தீன் பாவனை மூலம் எமது சுற்றுச்சூழல் மாசடைகிறது.

பொலித்தீன் பைகள் பாவனைக்கு பதிலாக துணியிலான பைகளை பயன்படுத்துவதன் மூலம் அதனைக் கட்டுப்படுத்த முடியும். உணவகங்களில் லஞ் சீற்றினை தவிர்த்து வாழையிலை, சுடுநீரில் சுத்தம் செய்த பீங்கான்கள் போன்றவற்றை பயன்படுத்தி உணவுகளை பரிமாற முடியும்.

மேலும், ஊர்காவற்றுறை பகுதியில் வசித்தவர்கள் தற்போது ஊர்காவற்றுறையை விட்டு வெளியேறி யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்றனர். இதனால், இங்கே உள்ள அவர்களின் காணிகள், வீடுகள் பராமரிப்பற்ற நிலையில் பற்றைகாடாக மாறியுள்ளது.

அங்கு சட்டவிரோத செயல்பாடுகள் இடம்பெறுவதுடன், சுகாதார சீர்கேடாகவும் உள்ளது. இவ்வாறான உங்களது காணிகளுக்கு அருகே வசிக்கின்ற மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கின்றனர். எனவே, அவற்றினை சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுங்கள்.

சுத்தம் செய்யத் தவறும் பட்சத்தில் நாங்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தயாராகி வருகின்றோம்- என்றார். (எ-05)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வன்னியில் பல்வேறு உதவிகள்



முல்லைத்தீவு, ஜன. 14

சந்நிதியான் ஆச்சிரமத்தால் முல்லைத்தீவு- துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் உள்ள புத்துவெட்டுவான் கிராமத்தில் 26 குடும்பங்களுக்கு 110, 500 ரூபாய் பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

புத்து வெட்டுவான் முருகன் ஆலயத்தில் வைத்து நேற்று முன்தினம் குறித்த உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள், தொண்டர்களுடன் சென்று வழங்கினார்.

இதேவேளை, வவுனியா கணேசபுரம் சிறீ சித்தி விநாயகர், கணேசபுரம் திருமூலர், பூவரசங்குளம் சிறீ பாலமுருகன், வடகாடு சிறீ முத்துமாரியம்மன், பெரியதம்பனை வரசித்தி விநாயகர் கோவில், புளியங்குளம் சிறீ முத்துமாரியம்மன், செட்டிக்குளம் ஞானப்பிள்ளையார், சிதம்பரபுரம் திருப்பழனி, கோதாண்ட நொச்சிக்குளம், முதலியார்குளம் சிறீ வேல் முருகன், சிதம்பரபுரம் நாகம்பாள் ஆகிய 11 அறநெறிப் பாடசாலைகளுக்கும் தைப் பொங்கலை முன்னிட்டு 121, 000 ரூபாய் பெறுமதியான பண்டிகை பொதிகள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தேவிபுரம் விக்கி குடியிருப்பை சேர்ந்த விழுப்புண் அடைந்த மற்றும் மாற்றுத் திறனாளிகளான முன்னாள் போராளிகளின் குடும்பங்களை சேர்ந்த 30 குடும்பங்களுக்கும் பொங்கல் பொதிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் வழங்கினார். (எ-08)

# சட்டவிரோதமாக மணல் கடத்தல் டிப்பருடன் சாரதி ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 14

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பகுதியில் சட்டவிரோதமாக மணல் கடத்தியவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பகுதியில் நீண்ட காலமாக மணல் கடத்தலில் ஈடுபட்டு வந்த டிப்பர் ஒன்றை மருதங்கேணி பொலிஸார் நேற்று முன்தினம் கைப்பற்றினர்.

இதன்போது அதன் சாரதியையும் கைது செய்தனர். இரகசிய தகவலின் அடிப்படையில் அதிகாலை குறித்த இடத்தை திடீரென சுற்றி வளைத்த மருதங்கேணி பொலிஸார் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிக் கொண்டு வந்த டிப்பருடன் சாரதியை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சாரதி, டிப்பருடன் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

விசாரணையின் பின்னர் கைது செய்யப்பட்ட நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருட்கள் சேவை ஏற்றுமதியில் கடந்த ஆண்டில் அம்பாந்தோட்டை துறைமுகம் 175 வீதம் வளர்ச்சி!

கொழும்பு, ஜன. 14

அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம் 2025 ஆம் ஆண்டில் பொருட்கள் சேவை ஏற்றுமதியில் 175 வீத அதிகரிப்பை ஏற்படுத்தி 8.24 மில்லியன் மெற்றிக் தொன்களை கையாண்டதாகக் கூறுகிறது.

இந்த அளவு 2024 ஆம் ஆண்டில் 3.0 மில்லியன் மெற்றிக் தொன்களாக இருந்தது.

உலகளாவிய துறைமுகத் துறை எதிர்கொண்ட மிகவும் சவாலான ஆண்டுகளில் ஒன்றாக 2025 ஆம் ஆண்டு இருந்தபோதிலும் இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அம்பாந்தோட்டை துறைமுகம் வெளியிட்ட ஒரு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

எங்கள் வேகத்தை கொள்கலன்கள் தான் அதிகரித்தன: ஒரே வருடத்தில் 53,170 கொள்கலன்களில் இருந்து 428,036 கொள்கலன்களாக அளவு உயர்ந்தது, இது ஒரு முக்கிய கொள்கலன் நுழைவாயிலாக எங்கள் விரைவான எழுச்சியைக் குறிக்கின்றது என்றும் அந்த அறிக்கை தெரிவித்தது.

இதேவேளை, உலகளாவிய சீர்குலைவு மற்றும் நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியிலும், இந்த செயல்திறன் அதன் வாடிக்கையாளர்களின் நம்பிக்கை, அதன் செயல்பாடுகளின் நெகிழ்வுத்தன்மை, அதன் சந்தைப்படுத்தல் முயற்சிகளின் வலிமை மற்றும் அதன் ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஆகியவற்றை பிரதிபலிக்கிறது என்று துறைமுகத்தின் தலைமை நிர்வாக அதிகாரி வில்சன் க்யூ கூறினார். (அ)

# இலஞ்சம் கோரிய அதிகாரி கைது!

கொழும்பு, ஜன. 14

இலஞ்சமாக 30,000 ரூபா மற்றும் விசேட மதுபான போத்தலை கோரிய குற்றச்சாட்டில் மதுபோதையில் இருந்த ஒரு வன பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹூலானுகே பகுதியைச் சேர்ந்த ஒருவர் அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து குறித்த அதிகாரி கைது செய்யப்பட்டதாக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

வன இலாகா பிரதேசத்தில் சட்டவிரோதமாக விவசாயம் செய்த குற்றச்சாட்டுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பதற்காகவே குறித்த அதிகாரி இலஞ்சம் கோரியுள்ளதாக விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (அ)

# 871 பேர் கைது!

கொழும்பு, ஜன. 14


போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் பணிகளின் போது மொத்தம் 871 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் காலக்கட்டத்தில் மொத்தம் 888 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான நபர்களில் எட்டு சந்தேக நபர்களுக்கு தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளன.

மேலதிகமாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 09 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (அ)

# நாடு திரும்பும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஜனாதிபதியுடன் சந்திப்பு!



கொழும்பு, ஜன. 14

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக தனது இராஜதந்திர சேவையை நிறைவு செய்துவிட்டு, நாளை மறுதினம் நாட்டிலிருந்து புறப்படவுள்ள திருமதி ஜூலி சங், நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்தார்.

திருமதி ஜூலி சாங் தனது பதவிக்காலத்தில் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவதற்காக மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகளை ஜனாதிபதி இதன்போது பாராட்டினார்.

அத்துடன், 'டித்வா' சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரிதமாக நிவாரணங்களை வழங்குவதற்காக அமெரிக்காவுடன் இணைந்து அவர் ஆற்றிய பங்களிப்பிற்கு ஜனாதிபதி தனது நன்றியைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளின் போது அவர் வழங்கிய விசேட ஆதரவிற்கும் ஜனாதிபதி இதன்போது பாராட்டுத் தெரிவித்தார்.

2022 பெப்ரவரி மாதம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகப் பதவியேற்ற திருமதி ஜூலி சாங், அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 ஆவது ஆண்டு நிறைவு உட்பட, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் பல முக்கிய மைல்கற்களில் தனது தலைமைத்துவத்தை வழங்கியிருந்தார். (அ)

# அந்தரங்க வீடியோ பதிவு செய்து மிரட்டி பணம் பறிக்கும் சம்பவங்கள் அதிகரிப்பு

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஜன.14

திருமணமான பெண்கள் மற்றும் அவர்களது காதலர்கள், இளைஞர்கள் மற்றும் பெண்களின் அந்தரங்க உறவுகளை வீடியோவாக பதிவு செய்து, வீடியோக்களை இணையத்தளங்களில் பகிர்வதாக மிரட்டி பணம் பறிப்பது தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலி தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி குற்றப் புலனாய்வுத் துறையின் பொறுப்பதிகாரி கே.கே.ஆர். அல்விஸ் கூறுகையில்-

குற்றவாளிகள் ரகசியமாக வீடியோக்களை பதிவு செய்ய மேம்பட்ட தொழில்நுட்ப கமெராக்களைப் பயன்படுத்துகின்றனர்.

இந்த கமெராக்கள் சட்டை கொலர்களில் மறைத்து வைக்கப்பட்டுள்ளன, பொக்கற்றுகளில் பேனா அல்லது லொட்ஜ்களில் படுக்கைகளுக்குள் உள்ளன. தனி நபர்கள் தங்கள் எஜமானிகள் மற்றும் இளம் காதலர்களுடனான அந்தரங்க உறவுகள் இரகசியமாக பதிவு செய்யப்பட்டு வலைத்தளங்களில் வெளியிடப்படுகின்றன. பெரும்பாலும், தாங்கள் காதலிக்கும் பெண்களை விடுதிகளுக்கு அழைத்துச் சென்று, அந்த இளம் பெண்ணின் நிர்வாணக் காட்சிகளை வீடியோவாகப் பதிவு செய்து, அவர்களை மிரட்டி பணம் பறிக்கப் பயன்படுத்துகின்றனர்.

சமீபத்தில், வெளிநாட்டில் பணிபுரியும் 45 வயதுடைய ஒரு பெண், ஒரு பேக்கரியில் பணிபுரியும் ஒரு ஊழியரை காதலித்தார். அவர் அவர்களின் அந்தரங்க உறவுகளை இரகசியமாக வீடியோவாக பதிவு செய்திருந்தார். அந்த காட்சிகளை இணையத்தளங்களில் பகிர்வதாக மிரட்டி இப்போது தன்னிடம் பணம் பறிப்பதாக அவர் பொலிஸில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இளம் பெண்கள் தங்கள் காதலர்களுடன் பழகும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும்-என்றார். (அ)

# நீரில் அடித்து செல்லப்பட்ட இரண்டு ரஷ்யர்கள் மீட்பு!

கொழும்பு, ஜன. 14

காலி, அஹூங்கல்ல கடற்கரையில் கடலில் குளிக்கச் சென்ற இரண்டு ரஷ்ய நாட்டவர்கள் பலத்த நீர் ஓட்டத்தில் அடித்துச் செல்லப்பட்ட பின்னர் மீட்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அஹூங்கல்ல பொலிஸ் பிரிவின் உயிர்காக்கும் பிரிவில் இணைக்கப்பட்ட பல அதிகாரிகள் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

மீட்கப்பட்ட இரண்டு ரஷ்ய நாட்டவர்களும் 35 மற்றும் 45 வயதுடையவர்கள் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

எச்சரிக்கை!
உங்கள் வீட்டில் சட்டவிரோத இந்தியன் DTH (DishTV) இருக்கிறதா?
SUN DIRECT | TATA sky | dishtv | VIDEOCON d2h Digital DTH Service
இவற்றை விற்பனை செய்வதும், பயன்படுத்துவதும் இரண்டுமே சட்டவிரோதம்!
அவசியமற்ற சட்டப்பிரச்சனைகளை தவிர்க்க, இன்று எமது சட்டபூர்வ கேபிள் டிவி இணைப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!
It has come to our notice that illegal DTH (Dish TV) service providers are advertising unverified services through social media platforms. While we have initiated measures to stop such illegal operations, TRC would like to notify all consumers to be cautioned of obtaining services from such illegal vendors or making any type of payments. You may refer http://www.trc.gov.lk/direct-to-home-satellite-broadcasting-operators.html for information on authorized DTH operators before subscribing for such services.
Telecommunications Regulatory Commission of Sri Lanka
155 செனல்கள் 1420/- ரூபா (அனைத்துவரிகளும் சேர்த்து)
புதிய இணைப்புக்கு 10,000/- ரூபா மட்டுமே!
தொடர்புக்கு 0707 888 999
Ask CABLE VISION
உங்கள் நம்பிக்கைக்குரிய கேபிள் டிவி சேவை!
நம்பகமான சேவை | தெளிவான படம் மற்றும் ஒலி | சட்டபூர்வ பாதுகாப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனவிலங்கு பாதுகாப்பு காரியாலயம் உடைப்பு!

## துப்பாக்கி உள்ளிட்ட திருட்டு பொருட்களுடன் மூவர் கைது




மட்டக்களப்பு, ஜன. 14

மட்டக்களப்பு, புனானை பகுதியில் அமைந்துள்ள வனவிலங்கு பாதுகாப்பு காரியாலயத்தை உடைத்து துப்பாக்கி உள்ளிட்ட இலத்திரனியல் பொருட்களை திருடிய சம்பவம் தொடர்பில் சித்தாண்டியைச் சேர்ந்த இரு சகோதரர்கள் மற்றும் திருட்டுப் பொருட்களை வைத்திருந்த பெண் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை - கொழும்பு வீதியில் புனானையில் உள்ள வனவிலங்கு பாதுகாப்பு காரியாலயத்தின் கதவு உடைக்கப்பட்டு, அங்கிருந்த சொட்கண் துப்பாக்கி ஒன்று, அதற்கான மூன்று தோட்டாக்கள், துளையிடும் கருவி (ரில்லர்), எரிவாயு அவன் மற்றும் மின்விசிறி என்பன திருடப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அந்தப் பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்டுவந்த சித்தாண்டியைச் சேர்ந்த இரு சகோதரர்கள் கைது செய்யப்பட்டனர். விசாரணையின் போது, திருடப்பட்ட துப்பாக்கி அந்தப் பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, புனானை பிரதேசத்தில் உள்ள விகாரைக்கு அருகாமையிலுள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மின்விசிறி உள்ளிட்ட பிற பொருட்களும் மீட்கப்பட்டன. திருட்டுப் பொருட்களை வைத்திருந்த வீட்டின் உரிமையாளரான பெண் ஒருவர் உட்பட மொத்தம் மூவர் கைது செய்யப்பட்டனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் தலைமறைவாகியுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# ஆரோக்கியமான வியாபாரம் திருகோணமலையில் இல்லை

திருகோணமலை, ஜன. 14

திருகோணமலையில் வியாபார சந்தையில் ஆரோக்கியமான போட்டி இல்லாத நிலை குறித்து பொதுமக்கள் மத்தியில் தீவிரமான கவலை நிலவுகிறது. வியாபாரத்தில் போட்டி நிலவினால் தான் நுகர்வோருக்கு நியாயமான விலையில் தரமான பொருட்கள் கிடைக்கும் என்பது அடிப்படை பொருளாதார உண்மையாகும்.

இதனை மாநகர சபை கவனத்தில் கொள்ள வேண்டும் என திருகோணமலை மாவட்ட வர்த்தக சபை தெரிவித்துள்ளது. ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது திருகோணமலையில் புடைவைகள் உள்ளிட்ட உடைச் சந்தையில் உள்ளகமாக - விலை நிர்ணய ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இதன் காரணமாக பொதுமக்கள் அதிக விலைக்கு பொருட்களை வாங்க வேண்டிய நிலை உருவாகி, பலர் கொள்வனவுகளை தவிர்த்து வருகின்றனர்.

மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று போன்ற பகுதிகளில் வியாபாரிகள் ஒருவருக்கொருவர் போட்டியிட்டு விலைக் குறைப்பு வழங்குவதன் மூலம் நுகர்வோருக்கு நன்மை அளிக்கின்றனர். ஆனால், திருகோணமலையில் சில வியாபாரிகள் ஒற்றுமை என்ற பெயரில் ஒரே விலையை நிர்ணயித்து அதிக விலையில் விற்பனை செய்வது நுகர்வோருக்கு, குறிப்பாக பாமர மற்றும் நடுத்தர மக்களுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

ஒரு சிறிய குழு வியாபார சங்கம் என்ற போர்வையில் மாநகர சபையை அச்சுறுத்தவோ, சந்தை முறையை கட்டுப்படுத்தவோ முடியாது. சட்டப்படி கட்டணங்கள் செலுத்தி, விதிமுறைகளை பூர்த்தி செய்பவர்களுக்கு யார் வேண்டுமானாலும் சுதந்திரமாக வியாபாரம் செய்ய மாநகர சபை ஊக்குவிக்க வேண்டும். இதுவே நியாயமான சந்தை அமைப்பையும் நுகர்வோர் நலனையும் பாதுகாக்கும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கல்முனையில் கடலரிப்பை தடுக்க துரித நடவடிக்கை



கல்முனை, ஜன. 14

கல்முனையில் உக்கிரமடைந்துள்ள கடலரிப்பை தடுக்கும் நோக்கில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதியமைச்சரும் அம்பாறை மாவட்ட அபிவி ருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான வசந்த பியதிஸ்ஸ வழிகாட்டலில் கரையோர பாதுகாப்பு திணைக்க ளத்தின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட உயர்மட்ட குழு ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை கல்முனை கடற்கரை பிரதேசத்துக்கு சென்று இவ்வாறு ஆய்வுகளை மேற்கொண்டது.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுள ரத்நாயக்க தலைமையிலான இந்தக்குழுவில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம, கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள பொறியியலாளர் எம். துளசிதாசன் மற்றும் கல்முனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ. மஜீத், தேசிய மக்கள் சக்தியின் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஏ. பர்ஹான் உள்ளிட்டவர்கள் பல்வேறு இடங்களையும் பார்வையிட்டு களப் பரிசோதனைகளில் ஈடுபட்டனர்.

கடலரிப்பை நிரந்தரமாக தடுப்பதற்கு மேலும் கற்களை போடும் வேலைத்திட்டத்தை விரைவில் மேற்கொள்ள துரித நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (எ-01)

# குளவிக் கொட்டுக்கு இலக்காகி வயோதிபப் பெண் உயிரிழப்பு!

நுவரெலியா, ஜன. 14

நானுஓயா கிரிமிட்டி தோட்டத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்தார்.

தொழிலாளர்கள் குழுவினர் இணைந்து தேயிலை மலையில் கொழுந்து பறித்துக்கொண்டிருக்கையில் மரம் ஒன்றிலிருந்த குளவி கூட்டை கழுகு கொத்திகலைத்ததால் குளவிக் கூடு கலைந்து கொழுந்து பறித்துக் கொண்டிருந்தவர் மீது குளவி கொட்டியதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நானுஓயா கிரிமிட்டி தோட்டத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான சடையன் லெட்சுமி (வயது -78) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சாய்ந்தமருது பகுதியில் நுளம்பு கட்டுப்பாட்டு பரிசோதனைகள்

சாய்ந்தமருது, ஜன. 14

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்து வருவதனால் தொடர்ச்சியாக நுளம்பு கட்டுப்பாட்டு புகை விசிறல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதை கருத்தில் கொண்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சஹீலா இஸ்ஸடீன் வழிகாட்டலில் சுகாதார வைத்திய அதிகாரி ஜெ. மதனின் ஆலோசனைக்கமைவாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்தச் செயல்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இதுதவிர சாய்ந்தமருது மக்களுக்கு டெங்கு நோய் பரவலை தடுப்பதற்கான வாய்மொழி மூலமான அறிவித்தல் அறிவிப்பு செய்யப்பட்டது.

இதில் பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் நுளம்பு களத்தடுப்பு உதவியாளர்கள் பங்குபற்றினர். டெங்கு உள்ளிட்ட நுளம்பால் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கையில் வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது இடங்களை ஆய்வு செய்த குழுவினர். நுளம்பு பெருக்கத்துக்கு வழிவகுக்கும் நீர் தேங்கிய இடங்களை கண்டறிந்து அவற்றை அகற்றும் நடவடிக்கைகளையும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு அறிவுறுத்தல்களையும் வழங்கினர்.


நுளம்பு கட்டுப்பாட்டில் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியதுடன் சுற்றுப்புற சூழலை தூய்மையாக பேணுவதன் மூலம் டெங்கு அபாயத்தை குறைக்க முடியும் எனவும் தெரிவித்தனர். (எ-01)

# மலேரியா தடை இயக்க பிரிவுக்கு இலத்திரனியல் உபகரணங்கள்

கல்முனை, ஜன. 14

கல்முனை பிராந்திய மலேரியா தடை இயக்கப் பிரிவின் நிர்வாக மற்றும் களச் செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் மலேரியா தடை இயக்கப் பிரிவுக்கு அத்தியாவசிய இலத்திரனியல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சஹீலா இஸ்ஸடீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், குறித்த பிரிவின் நீண்டகால தேவையாக காணப்பட்ட நிழல் பிரதி இயந்திரம், ஒலிபெருக்கி சாதனங்கள் உள்ளிட்ட பல்வேறு இலத்திரனியல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. (எ-01)



# திருகோணமலை - கொழும்பு இடையே இரவு நேர ரயில் சேவையை ஆரம்பிக்குக

திருகோணமலை, ஜன. 14

திருகோணமலை - கொழும்புக்கு இடையிலான இரவு நேர ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் நிலவிய சீரற்ற கால நிலை மற்றும் டித்வா புயல் காரணமாக குறித்த இரவு நேர ரயில் சேவை நிறுத்தப்பட்டிருந்தது.

திருகோணமலை- கொழும்பு இடையிலான பகல் நேர ரயில் சேவையில் ஈடுபட்டாலும் இரவு நேர சேவையின் மூலமாகவே அதிகளவான பயணிகள் பயணிக்கின்றனர்.

உள் நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இரவு நேர ரயில் சேவை மூலமே திருகோணமலை -கொழும்பு சேவையில் பயணிக்கின்றனர்.

இரவு நேர சேவையில் குளிரூட்டப்பட்ட முதலாம் தர பெட்டி காணப்படுவதனால் அதிகளவான வெளிநாட்டுப் பயணிகளும் கொழும்பில் இருந்து திருகோணமலையை வந்தடைகின்றனர்.

எனவே, ரயில்வே திணைக்களம் இவற்றை கருத்தில் கொண்டு இரவு நேர ரயில் சேவையை தாமதப்படுத்தாது மீள உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு...

சூறாவளி கரையைக் கடந்து 72 மணித்தியாலங்களுக்குள் அமெரிக்கா அறிவித்த 2 மில்லியன் அமெரிக்க டொலர்களின் தொடர்ச்சியாக இப்புதிய நிதியுதவி அமைகிறது.

இப்பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு மிகச் சரியான நேரத்தில், செயற்திறனுடைய உதவிகளை வழங்குவதற்கான அமெரிக்காவின் உறுதிப்பாட்டை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. (அ)

## அரசாங்க...

அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக பாடசாலை மாணவர்களுக்கு கொடுப்பனவு வழங்கும் திட்டத்தை 2026 ஆம் ஆண்டிலிருந்து, நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## மகிந்தவை...

கொழும்பிலுள்ள முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகத் தனது இராஜதந்திரப் பணிகளை நிறைவு செய்துகொண்டுள்ள ஜூலி சங், நாளை இலங்கையிலிருந்து புறப்படவுள்ளார்.

தனது பதவிக்காலத்தில் அமெரிக்கா மற்றும் இலங்கை இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கு ஜூலி சங் ஆற்றிய சேவையை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதன்போது வெகுவாகப் பாராட்டினார்.

அத்துடன் இலங்கையை விட்டுப் புறப்படவுள்ள ஜூலி சங்கின் எதிர்காலப் பணிகளுக்காக முன்னாள் ஜனாதிபதி தனது நல்வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார். (அ)

## பாதுகாப்பு ஆய்வு...

அவரது பூதவுடல் நேற்று காலை 9.00 மணி முதல் இல 11 சி/1 , சிறிவர்த்தன வீதி, தெகிவளை என்ற முகவரியில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இலங்கை ஊடகப் பரப்பில் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக இக்பால் அத்தாஸ் இருந்தார். உள்நாட்டுப் போரின்போது ஆயுதக் கொள்வனவுகளில் நடந்த கோடிக்கணக்கான ஊழல்களை இவர் அம்பலப்படுத்தினார்.

குறிப்பாக 'மிக்-27' விமானக் கொள்வனவு ஊழலை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தபோது முழு நாடும் அதிர்ந்தது. துப்பாக்கி ஏந்தியவர்கள் அவர் வீட்டுக்குள் நுழைந்து அச்சுறுத்தியபோதும், அரசாங்கம் அவருக்கு வழங்கிய பாதுகாப்பை விலக்கி நெருக்கடி கொடுத்த போதும், அவர் தனது கொள்கையை விட்டுக் கொடுக்கவில்லை.

சி.என்.என்., ரைம்ஸ் ஒவ் லண்டன் எனப் புகழ்பெற்ற ஊடகங்களின் இலங்கைக்கான முகமாக இருந்தவர்.

சர்வதேச ஊடக சுதந்திர விருதுகளை வென்றதன் மூலம் இலங்கையின் கௌரவத்தை உலக அரங்கில் நிலை நாட்டியவர். இன்று களத்தில் இருக்கும் ஊடகவியலாளர்களுக்கு இக்பால் அத்தாஸ் ஓர் எடுத்துக் காட்டு ஆவார். (அ)

## கல்வி சீர்திருத்தங்கள்...

தெரிவித்தனர்.

தேசிய கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவனம், கல்வியியலாளர்கள், சட்டத்தரணிகள், பேராசிரியர்கள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு முறையான பொறிமுறையின் கீழ் இந்த செயல்பாடுகள் அமைய வேண்டும் என தொழிற்சங்கங்கள் முன்மொழிந்தன.

ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரின் நம்பிக்கையைப் பெறுவது சீர்திருத்தங்களின் வெற்றிக்கு மிக முக்கியமானது என ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

அத்துடன் முதலாம் தரத்திற்கான சீர்திருத்தங்கள் திட்டமிட்டபடி நடைபெறும். ஆனால், ஆசிரியர் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப சவால்கள் காரணமாக 6ஆம் தரத்திற்கான சீர்திருத்தங்கள் 2027ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி விளக்கமளித்தார்.

மேலும் ஸ்மார்ட் பலகைகள், தொலைக்காட்சிகள் மற்றும் கணினிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் அரசாங்க நிதியிலேயே வழங்கப்படும் என்றும், இதற்காகப் பெற்றோரிடம் பணம் வசூலிக்கப்படாது என்றும் உறுதியளிக்கப்பட்டது.

அத்துடன், மாகாணங்களுக்கு இடையிலான ஆசிரியர் இடமாற்றங்கள், பதவியுயர்வுகள், சம்பள முரண்பாடுகள் மற்றும் அதிபர் சேவையில் உள்ள சவால்கள் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)

# 2 கிலோ தங்கம் திருட்டு; யாழில் இளம்பெண் கைது

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணம் மாநகரில் உள்ள பிரபல நகைக்கடை ஒன்றில் 10 கோடி ரூபாய் பெறுமதி மதிக்கத்தக்க 2 கிலோ கிராம் தங்க நகைகளை திருடிய குற்றச்சாட்டில் இளம் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் புறநகரை சேர்ந்த இளம் பெண் ஒருவரே தான் பணியாற்றிய நகைக் கடையில் சிறிது சிறிதாக தங்க நகைகளை திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணை வரும் ஜனவரி 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் மாநகர மத்தியில் இயங்கும் பிரபல நகைக் கடைகளில் ஒன்றில் சுமார் ஒன்றரை வருடம் பணியாற்றிய பெண் 3 மாதங்களுக்கு முன்னர் தனக்கு ஜனவரி 21ஆம் திகதி திருமணம் என்று கூறி பணியிலிருந்து விலகியுள்ளார்.

இந்த நிலையில் நகைக் கடையில் கணக்கெடுப்பில் சுமார் 2 கிலோ கிராம் தங்க நகைகள் காணாமல் போனதை கண்டறிந்து ஆராய்ந்தபோதே இந்த விடயம் கண்டறியப்பட்டு யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் நகைக் கடை உரிமையாளரால் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் சந்தேகநபரான இளம் பெண்ணை கைது செய்தனர். அவரிடம் முன்னெடுத்த விசாரணைகளில் திருடப் பட்ட நகைகளை அடகு வைத்தும், விற்பனை செய்தும் நிலத்துக்கு அடியில் புதைத்து வைத்துள்ள தாகவும் வாக்குமூலம் வழங்கப்பட்டுள்ளது.

சான்றுப்பொருள்களை மீட்க விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளதுடன் தொடர்புடையவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# தமிழக வணிகர்களை வடக்கு - கிழக்கில் முதலீடு செய்வதற்காக ஊக்குவியுங்கள்!

## தமிழக அரசிடம் கனடிய எம்.பி. வலியுறுத்தல்

சென்னை, ஜன. 14

இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தமது பொருளாதாரத்தை மீளக்கட்டமைப்பதில் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். பொருளாதாரத்தில் சிறந்து விளங்கும் தமிழக அரசினால் ஈழத்தமிழருக்கு உதவமுடியும் என நம்புகிறேன். அதற்கமைய தமிழக வணிகர்கள் இலங்கையின் தமிழ் பிரதேசங்களில் முதலிடுவதற்கு தமிழ்நாட்டு அரசு ஊக்கமளிக்கவேண்டும் என கனடிய பாராளுமன்ற உறுப்பினர் ஜுவனிதா நாதன் வலியுறுத்தியுள்ளார்.

உலகளாவிய ரீதியில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களை ஒன்றிணைக்கும் வகையில் தமிழக அரசினால் அண்மையில் சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அயலகத்தமிழர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

ஈழத்தமிழ் அகதிகளுக்கு தமிழ்நாட்டு அரசாங்கம் வழங்கிவரும் உதவிகள் மிகமுக்கியமானவையாகும். ஈழத்தமிழராக கனேடிய மண்ணுக்குப் புலம்பெயர்ந்து, இன்று கனடாவின் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள நான், தமிழ்நாடு அரசு ஈழத்தமிழ் அகதிகளுக்குச் செய்த - செய்கின்ற சகல உதவிகளுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் தமிழ்நாடு பொருளாதார செயற்பாடுகளில் முன்மாதிரியாகவும், சிறப்பாகவும் வளர்ந்து வருகிறது. அதனை சாத்தியமாக்கிக் கொண்டிருக்கும் அரசாங்கத்துக்கு எனது பாராட்டை வெளிப்படுத்துகிறேன். இதேவேளை மறுபுறம் இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தமது பொருளாதாரத்தை மீளக்கட்டமைப்பதில் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். பொருளாதாரத்தில் சிறந்து விளங்கும் தமிழக அரசினால் ஈழத்தமிழருக்கு உதவமுடியும் என நம்புகிறேன். அதற்கமைய தமிழக வணிகர்கள் இலங்கையின் தமிழ் பிரதேசங்களில் முதலிடுவதற்கு தமிழ்நாட்டு அரசு ஊக்கமளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (அ)

## தேசிய வீடமைப்பு...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் இந்த ஆரம்ப விழா நடைபெறவுள்ளது.

அன்றைய தினமே, யாழ். குடாநாட்டில் வீடற்ற 500 குடும்பங்களுக்குப் புதிய வீடுகளைக் கட்டுவதற்கான முதற்கட்ட காசோலைகள் வழங்கப்படவுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தத்தினால் இடம் பெயர்ந்த மக்களுக்காக முதற்கட்டமாக 2,500 வீடுகள் கட்டப்படும். ஒவ்வொரு வீட்டுக்கும் 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 3 தவணைகளாக வழங்கப்படும்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் 13,347 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

அரசாங்க ஊழியர்களுக்காக 1,000 வீடுகளும், கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்காக 4,998 வீடுகளும் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் பணியாற்றும் காவல்துறை அதிகாரிகளுக்காக, நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட 'ஹாபர் விலூ' வீடமைப்புத் தொகுதியில் 350 வீடுகளைக் கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இந்த வீடமைப்புத் திட்டத்திற்காக இந்திய அரசாங்கம் ஒரு வீட்டுக்கு ஒரு மில்லியன் ரூபா வீதமும், இலங்கை அரசாங்கம் ஒரு வீட்டுக்கு இரண்டு மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதாகப் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை இந்தத் திட்டத்தின் கீழ் 18,229 வீடுகளை நிர்மாணிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது.

இதேவேளை, டித்வா சூறாவளியினால் சேதமடைந்த வீடுகளுக்கான புனரமைப்புப் பணிகள் இந்தத் திட்டத்திற்கு இணையாகத் தனியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## அடுத்த வாரம்...

நோக்கமாகும் என்று அவர் கூறினார்.

விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் ஐந்தாவது மீளாய்வு ஏற்கனவே நிறைவடைந்துள்ளது.

மேலும் ஒப்புதல் வழங்குவதற்காக நாணய நிதிய நிர்வாகக் குழு டிசெம்பர் 15 அன்று முதலில் கூட திட்டமிடப்பட்டது. எனினும், விரைவான நிதியுதவிக்கான இலங்கையின் கோரிக்கையைத் தொடர்ந்து கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

மீளாய்வின் முடிவில் நாடு சுமார் 358 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெறும் என்று சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## முல்லைத்தீவு...

முன்னெடுக்கப்படவுள்ளது.

பொதுமக்களுக்குக் குறைந்த செலவில் உயர்தரமான மற்றும் தொடர்ச்சியான மூன்றாம் நிலை மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக இந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் நான்கு மாடிகளைக் கொண்ட புதிய விடுதித் தொகுதி ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

சுகாதார அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட இந்த முன்மொழிவுக்கு அமைச்சரவை தனது பூரண அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

இதற்கமைய, இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இந்த நிர்மாணப் பணிகளைத் துரிதமாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## கல்வி சீர்திருத்தங்களை...

வெளியிட்டுள்ள அறிக்கையில், தற்போது முன்மொழியப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தங்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் விமர்சனங்களில் பெரும்பாலானவை, அறிவியல் ரீதியா னவை அல்ல என சுட்டிக்காட்டியுள்ளது.

இவை வெறும் அரசியல் இலாபத்திற்காகவும் குறுகிய கால புகழுக்காகவும் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் எனத் தெரிவித்துள்ள சங்கம், இவ்வாறான போக்கு ஒட்டுமொத்த தேசத்தின் எதிர்காலத்திற்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என எச்சரித்துள்ளது.

உலகளாவிய தரநிலைகளின்படி, பாடத்திட்டங்கள் மற்றும் கற்பித்தல் முறைகள் குறைந்தது எட்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது புதுப்பிக்கப்படவேண்டும்.

ஆனால், இலங்கையில் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக பாடத்திட்டங்கள் மாற்றப்படாமல் இருப்பது மாணவர்களின் அறிவு, திறன் மற்றும் ஆக்கபூர்வமான சிந்தனை வளர்ச்சியைப் பாதித்துள்ளதாக அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நெல்லின் விலையை அதிகரிக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன. 14

எதிர்வரும் போகம் முதல் நெல் விலையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

சம்பா மற்றும் கீரி சம்பா நெல் வகைகளின் விலைகளை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், அரிசி விலையில் அதிகரிப்பு ஏற்படாது எனவும் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன சுட்டிக்காட்டினார்.

"நெல் விலை திருத்தம் தொடர்பாக ஏற்கனவே நாங்கள் விடயங்களை முன்வைத்துள்ளோம். குறிப்பாக நாடு நெல் 120 ரூபாவாகவே நீடிக்கும். சம்பா நெல்லின் விலை 125 ரூபாவிலிருந்து 130 ரூபா வரை அதிகரிக்கப்படும். விவசாயிகளின் தரப்பைப் பொறுத்தவரை கீரி சம்பா 132 ரூபாவிலிருந்து 140 ரூபா வரை அதிகரிக்கப்படும்.

எதிர்வரும் போகும் முதல் இந்த அதிகரிப்பு நடைமுறைக்கு வரும். அறுவடை செய்யும்போது விவசாயிகளால் அந்த விலைகளுக்கு நெல்லை வழங்க முடியும். ஆனால், அதற்கு இணையாக அரிசி விலையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுக்கவில்லை. அவ்வாறான ஒரு தீர்மானத்தை எடுக்கும் எதிர்பார்ப்பும் இல்லை." -என்றார். (அ)

# எந்தவொரு அனர்த்தங்கள் ஏற்பட்டாலும் வேலைத்திட்டங்களை கைவிடமாட்டோம்

## ஜனாதிபதி அநுரகுமார அறிவிப்பு

கொழும்பு, ஜன. 14

"டித்வா" சூறாவளியினால் ஏற்பட்ட அனர்த்தத்தை அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களைப் பின்னோக்கித் தள்ளவோ அல்லது முடக்கவோ ஒருபோதும் பயன்படுத்தப் போவதில்லை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் பணிகளை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மீண்டெழும் இலங்கை," தேசிய வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியைச் சந்தித்திருந்த நாடு படிப்படியாகக் கட்டியெழுப்பப்பட்டு வரும் வேளையில், இந்தச் சூறாவளியை எதிர்கொள்ள



நேரிட்டது. இருப்பினும், இதன் மூலம் அரசாங்கம் எவ்விதத்திலும் தனது பொறுப்புகளில் இருந்து நழுவிக்கொள்ள வேண்டியத் தேவை இல்லை என ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

"நாங்கள் தயாரித்துள்ள நிகழ்ச்சி நிரலை கைவிடாமல், இந்த அனர்த்தத்தை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்துத்தான் நாங்கள் போராடுகிறோம்" என ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார்.

"தேவைப்பட்டால் இந்த அனர்த்தத்தின் மீது பல பழிகளைப் போட்டுத் தப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு எமக்கு இருந்தது. வரலாற்றில் நாங்கள் அவ்வாறுதான் பயணித்தோம். 30 ஆண்டுகளாக அனைத்து அழிவுகளுக்கும் யுத்தத்தையே காரணமாகக் காட்டினார்கள்.

அவ்வாறான ஒரு நிலையே எமக்கு இருந்தது. சில தொற்றுநோய் நிலைமைகளை இந்த அழிவுகளுக்கான போர்வையாக மாற்றிக் கொண்டார்கள்.

எமது வேலைத்திட்டத்தைப் பின்னோக்கித் தள்ளவோ அல்லது செயலிழக்கச் செய்யவோ இதனைப் பயன்படுத்தப் போவதில்லை என்ற தீர்மானத்திற்கு நாங்கள் வந்துள்ளோம்." என்றார் ஜனாதிபதி. (அ)

# மகா சங்கத்தினரை அவமதித்து பேசினார் அமைச்சர் லால்காந்த

## அரசாங்கத்துக்கு கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 14

மகா சங்கத்தினரை அவமதிக்கும் வகையில் பேசிய அமைச்சர் கே.டி. லால்காந்த மீது நடவடிக்கை எடுக்கத் தவறினால், அரசாங்கம் விரைவில் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று தேசிய சங்க மாநாட்டின் தலைவர் லியன்வல சாசனாரதன தேரர் எச்சரித்துள்ளார்.

கண்டி - மடவளையி ஜனமங்கலராமய அனைத்துலக பௌத்த மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- அரசியல்வாதிகளுக்கும் மகா சங்கத்தினருக்கும் இடை யில் அவ்வப்போது கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தாலும், நாட்டின் வரலாற்றில் எந்த அரசியல் தலைவரும் பௌத்த மதகுருமார்களை இவ்வளவு அவமதித்ததில்லை.

அநீதி, ஊழல் மற்றும் சட்ட மீறல்களுக்கு எதிராக மகா சங்கத்தினர் வரலாற்று ரீதியாக குரல் கொடுத்துள்ளனர். தவறுகளை சவால் செய்ய மதகுருமார்களுக்கு தார் மீக பொறுப்பு உள்ளது. அமைச்சர் லால்காந்த தனது கருத்துக்களை விரை வாக மீளப்பெற வேண்டும்.

ஜனாதிபதி விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும், அவ்வாறு செய்யத் தவறினால் நாட்டின் உறுதித் தன்மை மற்றும் சமூக நல்லிணக்கத்துக்கு கடுமையான அச்சுறுத் தல் ஏற்படும். இந்தப் பிரச்னை உடனடியாகத் தீர்க்கப்படாவிட் டால், பொதுமக்களின் எதிர்வினை தவிர்க்க முடியாதது. நாட்டின் கலாசார மற்றும் மத விழுமியங்களுக்கு ஏற்ப அரசாங்கம் செயல்பட வேண்டும் - என்றார். (அ)

# சினைப்பர் துப்பாக்கிகளுடன் சிக்கிய இருவரும் படையினர்

கொழும்பு, ஜன. 14

கொழும்பு - 01இல் சினைப்பர் ரக துப்பாக்கிகளுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இருவரும் இராணுவ அதிகாரிகள் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இருவரும் இராணுவத்தின் கொமாண்டோ படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று இராணுவத்தின் சார்பில் முற்பட்ட சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இருவரும் நேற்று முன்தினம் சிவில் உடையில் கறுப்பு துணியில் மறைத்து சினைப்பர் துப்பாக்கியை எடுத்துச் சென்றபோது கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லை என்று சி. ஐ. டி. யினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இராணுவத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணியின் சமர்ப்பணங்களை அடுத்து அவர்களை விடுதலை செய்த நீதிவான், அவர்களை பொறுப்பான இராணுவ பிரிவின் தளபதியிடம் ஒப்படைக்குமாறு சி. ஐ. டிக்கு நீதிவான் உத்தரவிட்டார். (அ)

# கல்வி அமைச்சர் உடன் பதவி விலகவேண்டும்!

## ஐ.தே. க. வலியுறுத்து

கொழும்பு, ஜன. 14

பிரதமர் ஹரிணி அமரசூரிய கல்வி அமைச்சு பதவியை துறக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் தலதா அத்துக்கோரள இவ்வாறு வலியுறுத்தினார்.

புதிய கல்வி மறுசீரமைப்பு கைவிடப்படவேண்டும், கல்வி அமைச்சு பதவியில் இருந்து பிரதமர் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி விமல் வீரவன்ஸவால் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். (அ)

# தரம் 6 புதிய பாடப்புத்தகங்கள் இன்னும் முழுமையாகவில்லை!

## அதிபர்கள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 14

தரம் 6 மாணவர்களுக்கான புதிய பாடப்புத்தகங்கள் இன்னும் முழுமையாகத் தயாராகாத நிலையில், ஜனவரி 21ஆம் திகதி பாடசாலைகளை ஆரம்பிப்பது சாத்தியமற்றது என தரப்படுத்தப்பட்ட அதிபர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் நிமல் முதுன்கொட்டுவ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய பாடத்திட்டத்தில் டிஜிற்றல் தொழில்நுட்பம் கியூஆர் குறியீடுகள் மற்றும் இணைய இணைப்புகள் அதிகம் பயன்படுத்தப்படுவது குறித்து அரசாங்கத்திற்குள் முரண்பாடுகள் காணப்படுகின்றன. மாணவர்கள் அதிக நேரம் டிஜிற்றல் திரைகளைப் பார்ப்பது அவர்களின் உடல் மற்றும் மன நலனைப் பாதிக்கும் என்பதால், பாடப்புத்தகங்களில் டிஜிற்றல் மயமாக்கலைக் குறைக்க வேண்டும். இதற்கு நேர்மாறாக, நவீன தொழில்நுட்பத்தை கல்வி முறையில் கட்டாயம் புகுத்த வேண்டும். கடந்த காலங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கிலப் பாடத் தொகுதிகள் தோல்வியடைந்ததை அவர் நினைவுபடுத்துகிறார். தற்போதைய சீர்திருத்தத்திலும் பாடப் புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டு மாணவர்களுக்குக் கிடைப்பதில் பெரும் தாமதம் நிலவுகிறது. இது மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளைப் பாதிக்கும். கல்வித்துறை சார்ந்த பிரச்சினைகளில் ஜனாதிபதி அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயல்படுகிறார். மகிந்த ஜயசிங்க போன்ற சில தொழிற்சங்கத் தலைவர்கள், மாணவர்களின் நலனை விடத் தங்களுக்கு அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதிலேயே அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இதற்காகவே அவர்கள் அரசாங்கத்துடன் இணங்கிச் செல்கின்றனர். கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியை முறையான திட்டமிடல் இன்றி செலவு செய்கின்றனர். தரம் 6 மாணவர்களுக்கான புதிய பாடப்புத்தகங்கள் இன்னும் முழுமையாகத் தயாராகாத நிலையில், ஜனவரி 21இல் பாடசாலைகளை ஆரம்பிப்பது சாத்தியமற்றது-என்றார். (அ)

# இஸ்ரேலிய மத தலம் மூடப்பட்டமை சிங்கள ராவய அமைப்பு கண்டனம்

கொழும்பு, ஜன. 14

இஸ்ரேலிய நாட்டவர்களின் மத உரிமைகளை அரசாங்கம் பாதுகாக்கத் தவறிவிட்டதாக சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அறுகம்பை பிரதேசத்தில் இஸ்ரேலியர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த "சபாத் ஹவுஸ" எனும் மத மத்தியஸ் தலம் மூடப்பட்டுள்ளது. இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கும் இஸ்ரேலிய நாட்டவர்களின் மத உரிமைகளை அரசாங்கம் பாதுகாக்கத் தவறிவிட்டது.

இலங்கையின் அரசியலமைப்பின் 10 முதல் 15 வரையான உறுப்புரைகளின் கீழ், ஒவ்வொரு பிரஜைக்கும் தாம் விரும்பும் மதத்தைப் பின்பற்றுவதற்கும், மத ஸ்தலங்களை அமைப்பதற்கும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், அருக்கம்பையில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளுக்காக இயங்கி வந்த "சபாத் ஹவுஸ்" திடீரென மூடப்பட்டுள்ளது.

முன்னதாக, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பிறகு தேவாலயங்களுக்கும் விகாரைகளுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டது போல, ஏனைய மத ஸ்தலங்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான உறவு மிகவும் பழமையானது. இலங்கையர்கள் பலருக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதிலும், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் இஸ்ரேல் முக்கிய பங்கு வகிக்கின்றது. இஸ்ரேலில் பௌத்த மதத்தைப் பின்பற்றுவதற்கும் விகாரைகளை அமைப்பதற்கும் அந்நாட்டு அரசாங்கம் முழு சுதந்திரம் வழங்கியுள்ள நிலையில், இலங்கையில் அவர்களது மத உரிமைகள் பறிக்கப்படுவது சர்வதேச ரீதியில் நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்-என்றார்.

# அரச ஊழியருக்கு வழங்கப்படும் பண்டிகை முற்பணம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 14

அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பண்டிகை முற்பணத்தை 15,000 ரூபாவாக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள தாபன விதிக்கோவை ஏற்பாடுகளுக்கமைய, அரச ஊழியர் ஒருவர் தைப்பொங்கல், ரமழான், சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு, வெசாக், தீபாவளி, நத்தார் போன்ற பண்டிகைகளுக்காகவும், சிவனொளிபாத மலை தரிசனம் மற்றும் ஹஜ் கடமை போன்ற யாத்திரிகப் பயணங்களுக்காகவும் 10,000 ரூபாவை முற்பணமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த முற்பணத் தொகையானது எவ்வித வட்டியுமின்றி 08 மாதத் தவணைகளில் மீள அறவிடப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், குறித்த முற்பணத் தொகையை 15,000 ரூபாவாக அதிகரிப்பதற்கு 2026 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டிருந்தது.

அதற்கமைய அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பண்டிகை முற்பணத்தை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.